


19. 03. 2026

தலைப்புச் செய்திகள்

- சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களை தளவாட உற்பத்தி சங்கிலியுடன் இணைப்பதன் அவசியத்தை பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.
- இந்திய ஏற்றுமதியாளர்களின் நலன்களை பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக, மத்திய வர்த்தக செயலர் திரு. ராஜேஷ் அகரவால் கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளன.
- எண்ணெய் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை பறிமுதல் செய்வதை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள பெட்ரோலிய கூட்டமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.
- ஃபிரான்ஸில் நடைபெறும் Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ஆயுஷ் ஷெட்டி இன்று களமிறங்குகிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழும் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களை தளவாட உற்பத்தி விநியோக சங்கிலியுடன் இணைப்பதன் அவசியத்தை பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.

புதுதில்லியில் தேசிய பாதுகாப்பு தொழில் நிறுவனங்கள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அமைச்சர், ராணுவத்தின் மாபெரும் திட்டங்களின் ஒருஅங்கமாக சிறு தொழில் நிறுவனங்கள் மேம்படும்பொழுது படைப்பாற்றல் திறனையும், அதன் வேகத்தையும் துரிதமாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு, தானியங்கி செயல்பாடு, ரோபோடிக்ஸ் உள்ளிட்ட அதிநவீன தொழில் நுட்பங்களில் பல்வேறு சிறு குறு தொழில் நிறுவனங்கள் துடிப்புடன் பணியாற்றுவதாக எடுத்துரைத்தார்.

அதிநவீன தொழில்நுட்பங்கள், புதிய கண்டுபிடிப்புகளை உள்ளடக்கிய தளவாட கண்காட்சியையும் அமைச்சர் துவக்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

உகாதி பண்டிகை

உகாதி பண்டிகையை ஒட்டி தெலுங்கு, கன்னட மொழிபேசும் மக்களுக்கு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி, உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தமிழக பொறுப்பு ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி உள்ளிட்டோரும் மகிழ்ச்சியும், வளமும் தழைத்தோங்க வாழ்த்தியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜேஷ் அகரவால்

மேற்காசியா நாடுகளில் நிலவும் நெருக்கடியின் மத்தியில் இந்திய ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்க உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்வதாக மத்திய வர்த்தக செயலர் திரு. ராஜேஷ் அகரவால் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், ஏற்றுமதியாளர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசு உரிய அறிவுறுத்தல்களை பிறப்பித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

மத்திய அரசு, ஏற்றுமதி மேம்பாட்டு தளவாடங்கள் மீட்பு திட்டத்தை செயல்படுத்த உள்ளதாக கூறிய அவர், முக்கிய அமைச்சகங்களுடனும், வெளிநாட்டு இயக்கங்களுடனும் தொடர்ந்து ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

காவிரி மேலாண்மை

காவிரி மேலாண்மை ஆணையத்தின் 49-வது கூட்டம் வரும் 25-ம் தேதி புதுதில்லியில் நடைபெறுகிறது.

ஆணையத்தலைவர் திரு. எல். கே. ஹல்தர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தமிழகம், கர்நாடகம், கேரளம், புதுச்சேரியிலிருந்து அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல்

கேரளம், புதுச்சேரி, அசாம் மாநிலங்களில் அடுத்த மாதம் 9-ம் தேதி நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் முழுவீச்சில் நடைபெறுகிறது.

கேரள மாநிலத்தில் இடதுசாரி ஜனநாயக முன்னணி சார்பில் தர்மடம் தொகுதியில் போட்டியிட உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிட்ஸ்ட் கட்சி வேட்பாளரும் முதலமைச்சருமான திரு. பினராய் விஜயன் தனது வேட்புமனுவை இன்று தாக்கல் செய்தார்.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 23-ம் தேதி கடைசிநாளாகும்.

இதனிடையே அசாமிலும், கேரளத்திலும், போட்டியிடும் பி.ஜே.பி. வேட்பாளர்களின் முதல் மற்றும் இரண்டாவது பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதேபோல் இடைத்தேர்தல் நடைபெறும் கோவா, நாகலாந்து, கர்நாடகா, திரிபுரா மாநிலங்களுக்கான வேட்பாளர் பட்டியலையும் பி.ஜே.பி. இன்று வெளியிட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

ஆடு விற்பனை

ரமலான் பண்டிகையை முன்னிட்டு ஈரோடு புஞ்சை புளியம்பட்டி கால்நடை சந்தையில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் காரணமாக ஆடுகள் விற்பனை மந்தமடைந்ததால் வியாபாரிகள் கவலையடைந்துள்ளனர்.

இதேபோல் தென்காசி மாவட்டம் பாவூர் சத்திரம் கால்நடை சந்தையில் விற்பனை கணிசமாக குறைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் நிலவரம்

தமிழ்நாட்டில் அடுத்தமாதம் 23-ம் தேதி நடைபெறும் வாக்குப்பதிவிற்கான வேட்பு மனு தாக்கல் தொடங்க 10 நாட்களே எஞ்சியுள்ள நிலையில் அரசியல் நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

வேட்பாளர்களை தேர்வு செய்தல், கூட்டணியை இறுதி செய்வது, தொகுதி பங்கீடு ஆகியவற்றில் அரசியல் கட்சிகள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளன.

அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் தொகுதி பங்கீடு இன்னும் 2 நாட்களில் இறுதி செய்யப்படும் என்று அதில் இடம்பெற்றுள்ள பி.ஜே.பி. தெரிவித்துள்ள நிலையில், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி, உள்துறை அமைச்சரும், பி.ஜே.பி. மூத்த தலைவருமான

திரு. அமித்ஷாவை இவ்விஷயமாக சந்தித்து கலந்தாலோசிக்க இன்று புதுதல்லி சென்றுள்ளார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பிலும், கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இதனிடையே திமுக சார்பில் தேர்தலில் போட்டியிட விருப்பமனு அளித்தவர்களுக்கான நேர்காணல் கட்சித்தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் தலைமையில் 3-வது நாளாக இன்றும் தொடர்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

## தேர்தல் பெட்ரோல்

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலில் உள்ள நிலையில் பெட்ரோல் பங்க் ஊழியர்கள் எண்ணெய் நிறுவனத்திற்கு தினசரி செலுத்த வேண்டிய பணத்தை பறிமுதல் செய்யாமல் இருக்க உரிய நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொள்ள வேண்டுமென்று பெட்ரோலிய கூட்டமைப்பு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மாநிலத்தில் உள்ள பெட்ரோல் பங்குகளில் 75 சதவிகித விற்பனை, பணபர்வத்தனை மூலம் நடைபெறுவதால் இக்கோரிக்கை.

❖❖❖❖❖❖❖❖❖❖

## பணம் பறிமுதல்

தமிழ்நாட்டில் நேற்றுமாலை வரை ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 42 கோடி ரூபாய் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ராணிப்பேட்டை நாமக்கல், திருண்ணாமலை, துறையூர் பகுதிகளில் 14 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் ரொக்கம் மற்றும் 34 சவரன் தங்கமும் பறிமுதல் செய்யபட்டுள்ளது.

மதுரை திருவாதவூரில் ஆவணமின்றி வாகனத்தில் கொண்டுசெல்லப்பட்ட ஒன்றரை லட்ச ரூபாயும் திருத்தணியில் மூன்று லட்சம் ரூபாயும் கைப்பற்ற பட்டுள்ளது.

இதனிடையே வந்தவாசியில் 2 இடங்களில் பறக்கும் படையினர் பறிமுதல் செய்த நான்கரை லட்சம் ரூபாய் உரியவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகளை மீறியதாக பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மீது 17 வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளது.

சென்னையை அடுத்த பூந்தமல்லியில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம் உள்ளிட்ட நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளுடன் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான புகார்களை தேர்தல் பொதுப்பார்வையாளர்களின் தொலைபேசி எண்களில் தெரிவிக்கலாம் என்று மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி. ஸ்நேகா கூறியுள்ளார்.

நெல்லையில் வேட்பாளர்களின் செலவுகளை கண்காணிப்பது குறித்த ஆலோசனை கூட்டம் செலவின பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் தலைமையில் இன்று நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் தேர்தல் விதிமீறல் புகார்களை பொதுப்பார்வையாளரிடம் தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

.. வாய்ஸ் ...

திருப்பத்தூர் மாவட்டத்தில் வாக்காளர் விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி. சிவசௌந்தரவல்லி இன்று துவக்கி வைத்தார்.

திருச்சி மாவட்டத்தில் தபால் வாக்குகள் செலுத்த விரும்பும் செய்தியாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், ஒளிப்பதிவாளர்கள் நாளை மாலை 4 மணிக்குள் மக்கள் தொடர்பு அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஈரோடு காய்கறி சந்தையில் 100 சதவிகித வாக்களிப்பை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாட்டில் இன்று இடிமின்னலுடன் கூடிய மழை பரவலாக பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே நாகை மாவட்டத்தில் தொடர்மழை காரணமாக கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் தேங்கிக் கிடப்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு நிலக்கோட்டை சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்த கனமழையால் வாழை மற்றும் தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன.

திருச்சி, கள்ளக்குறிச்சி வேலூர் மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்ததால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

சென்னை புறநகர் பகுதிகளில் பரவலாக மழை பெய்ததையடுத்து அங்கு வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவுவதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 2 ஆயிரம் கனஅடியாக இன்று அதிகரித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிண்டன்

ஃபிரான்ஸில் நடைபெறும் Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இன்று இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி – ஜப்பானின் ஒக்கிமோட்டோவை எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ஆகர்ஷி கஷ்யப் – தன்விஷர்மாவையும்,

மாளவிகா பன்சோத் – மலேஷியாவின் வாங் லிங்கையும் இன்று எதிர்கொள்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖